1994 ஏப்ரல் 5]

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆறு ஆதிதிராவிட மாணவர்களுக்கும், நாகை-காயிதே மில்லத் மாவட்டம், மனக்குடி மேல்நிலைப்பள்ளியில் வழங்காமல் இருந்தபொழுது இந்தக் கேள்வியை நான் போட்டிருந்தேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் வழங்கி விட்டதாகத் தன்னுடைய பதிலுரையிலே சொல்லியிருக்கிறார்கள். நன்றி. இதுபோன்று காலதாமதம் இல்லாமல் ஆதிதிராவிட மாணவர்கள் விடுதியிலே தங்கிப் படிக்கக்கூடியவர்களுக்கு உடனடியாக அந்த நிதிகளை வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆறு மாணவர்களுக்கும் வயது 18 வயதுக்கு மேற்பட்டுவிட்டது என்ற காரணத்தினால் நிறுத்தி வைத்திருந்தார்கள். ஆனால் தமிழக அரசு வயது வரம்பை நீக்கிய விவரம் தெரியாமல் அந்த நடவடிக்கையைத் தாமதப்படுத்தியிருக்கிறார்கள். அதன்பிறகு நமது ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் அவர்களின் அறிவுரையின்படி அந்த ஆறு மாணவர்களுக்கும் அளிக்கப்பட்டு இருக்கிறது. இதுபோன்ற காலதாமதம் இனிமேல் ஏற்படாது துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 198, திரு. வீ. சுப்பிரமணியன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

198–

சிறுவந்தாடி கிராமத்தில் ஆதிதிராவிடர் நல விடுதிக்குக் கட்டிடம் கட்டுதல்

*21244-திரு. வீ. சுப்பிரமணியன்:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

விழுப்புரம் வட்டம், சிறுவந்தாடு கிராமத்தில் இயங்கும் ஆதிதிராவிடர் நல விடுதிக்கு நிலம் கையகப்படுத்தி கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம் வட்டம், சிறுவந்தாடு கிராமத்தில் ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி தாட்கோவினால் கட்டிடம் கட்டப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாணவர் விடுதி கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. வீ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனையில் உள்ளது என்று சொன்ன, நான் வணங்குகின்ற தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய நல்லரசுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கி, அந்த வேலைகள் எப்பொழுது தொடங்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சிறுவந்தாடு ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி கட்டிடம் கட்டுவதற்கு ரூபாய் 22 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் வரப்பெற்றிருக்கிறது. வருகிற நிதியாண்டில் அதுபற்றி ஆராயப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 199, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

199--

தமிழ்நாட்டில் சீர்மரபினர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டுதல்

***20234-டாக்டர் பெ. வீரபாண்டியன்:**

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மறறும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாட்டில் வாழ்க்கைத் தரத்தில் பின்தங்கியிருக்கும் சீர்மரபினர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம், ஆகிய மாவட்டங்களில் சீர்மரபினர்களான செங்கையம் குடி குறவர் கொம்மார் ஜோஹிஸ், டாபி குறவர், ஒட்டர் பொன்னை குறவர் உப்பு குறவர், சர்க்கரை தலைக்குறவர், வண்ணார் வலையர் ஆகிய சீர்மரபினர் அதிகமாக இருக்கிறார்கள்.